பொது நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

ஏடு 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 05 புதன்கிழமை (20-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 277

## மனித உரிமைகள் செயலணி கொழும்பில் கூடி ஆராய்வு

கொழும்பு, நவ. 20

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் கிளை இயங்குவதாயின் அதன் அதிகாரிகளாக அப்பகுதியினரைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தேசிய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

செயலணிக் குழுவின் தலைவர் சி.ரி. ஜான்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் இக்கூட்டம் கொழும்பில் நடந்தது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எம். பி. நீலன் திருச்செல்வம், களுத்துறை மாவட்ட ஐ. தே. க. எம். பி மஹிந்த சமரசிங்க, இளவிவகார திட்டமிடல் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ஈ.பி.டி.பி. எம். பிக்கள் எஸ். சிவதாசன், என். சந்திரகுமார், தங்கவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் செயலணிக் குழுவின் பணிகள் தொடர்பாக ஜனாதிபதி உரிய அறிவுறுத்தல்களை விடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

செயலணிக் குழுக்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா முகாம்களில் இன்று உண்ணாவிரதம்

## புளொட் ஆதரவில் நடக்கிறது

கொழும்பு, நவ. 20

வவுனியாவில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோர் 9 கோரிக்கைகளை முன்வைத்து இன்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளனர்.

முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளோரில் கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், 60 வயதுக்கு மேற்பட்டோர், அங்க வீனர்கள், நிரந்தர நோயாளிகள் ஆகியோர் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் பிரதான கோரிக்கை ஆகும்.

வன்னியிலிருந்து வந்தவர்களில் பலர் நீண்ட நாள்களாக இங்கு அடைத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் இன்றைய உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

தமிழ் மக்கள் எதிர் கொள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த வருடத்தில் ரூபா 4,730 கோடி இலங்கைக்கு உதவி கிடைக்கும்!

## எதிர்பார்த்ததை விட அதிகம்

பாரிஸ், நவம்பர் 20

பாரிஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் உலக வங்கிப் பிரதிநிதிகளின் மாநாட்டில் இலங்கைக்கு அடுத்த வருடம் 4,730 கோடி ரூபா பெறுமதியான உதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட தொகையை விட இது 93 கோடி50 லட்சம் அதாவது 2 சதவீதம் அதிகம் ஆகும்.

வடக்கிலும், கிழக்கிலும் சமாதானம் நிலை நாட்டப்பட்ட பின்னர் மேலதிக உதவிகள் வழங்கப்படும் என்று இந்த மாநாட்டில் கலந்து கொண்ட உதவி வழங்கும் நாடுகள் பலவும் சுட்டிக் காட்டின.

வடக்கு—கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் தாமதமின்றிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்று மாநாட்டில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் சாதகமான சூழ்நிலைகள் காணப்பட்டால் இலங்கையின் வடக்கு — கிழக்குக்கு மேலதிக உதவி வழங்குவதற்காக விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்கும் மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவுக்கு உலக வங்கி தலைமை வகிக்கிறது. (இ-3-10)

## கடல் கொந்தளிப்பால் தாமதித்த கப்பல்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

கடல் கொந்தளிப்புக் காரணமாக திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்கான பயணத்தை ஒத்திப்போட்ட பயணிகள் கப்பல்கள் நேற்று மாலை காங்கேசன் துறைக்கு வந்துசேர இருந்தன.

இக்கப்பல்களில் வரும் பயணிகளை உடனடியாக வே காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து செயலக அதிகாரிகள் காங்கேசன் துறைக்குச் சென்றனர்.

இந்தப் பயணிகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் பெண்ணுடன் திரிந்த யாழ். இளைஞர் கைது!

கொழும்பு, நவ. 20

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பெண் உல்லாசப் பயணி ஒருவருடன் அளுத்கம பகுதியில் நடமாடியதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அளுத்கம பொலீஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கவேலு ஜெகதீஸ்வரன் என்னும் இந்த இளைஞன் களுத்துறை மஜிஸ்திரேட் சுனில் ராஜபக்ஷ முன் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்,

## தமிழர் பாதுகாப்பு மாநாடு

சென்னை, நவ. 20

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு ஒன்று நேற்று சென்னையில் நடந்தது.

பாட்டாளி மக்கள் கட்சி அமைப்பாளர் டாக்டர் ராமதாஸ், அதன் தலைவர் கீரன் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தமிழீழத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்றும்—

இலங்கையில் இருந்து அகதிகள் வருவதைத் தடுக்கக் கூடாது என்றும்—இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும்—மாநாட்டில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உரை எதுவும் நிகழ்த்தக் கூடாது என்று பொலீஸ் தலைமையதிகாரி விடுத்த கோரிக்கையை மீறி, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைப் போற்றியும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தும் பலர் உரை நிகழ்த்தினார்கள் என்று பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-3)

## சித்தாண்டியில் குண்டு வெடிப்பு

கொழும்பு, நவ. 20

மட்டக்களப்பு சித்தாண்டியில் பால் சேகரிப்பு நிலையத்துக்கு அருகில் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் இராணுவத்தினர் ஒருவர் காயமுற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-3)

# 6பேரின் உருக்குலைந்த சடலங்கள் எழுதுமட்டுவாள் பகுதியில் மீட்பு!

## 43 நாள்களுக்கு முன் காணாமற் போயிருந்தவர்கள்

கடந்த மாதம் 5 ஆம் திகதி காலை கண்டி வீதி வழியாக வந்த போது காணாமற் போனதாகக் கூறப்படும் ஆறு அப்பாவிப் பொது மக்கள் 43 நாள்களின் பின்னர் உருக்குலைந்த நிலையில் சடலங்களாக எழுதுமட்டுவாள் ஒட்டுவெளி வயற் பகுதியில் மீட்கப்பட்டனர்.

கடந்த ஞாயிறன்று சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரனின் முன்னிலையில் பொலீஸாரினால் இச்சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

சடலங்களில் காணப்பட்ட உடுப்புகள் மற்றும் அடையாள அட்டைகள், [illegible] முத்திரைகள் ஆகியன [illegible] அச் சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த 4 படையினர் காட்டிய இரு இடங்களில் தோண்டப்பட்ட போது இவ்விரு குழியிலும் [illegible] சடலங்கள் காணப்பட்டன.

குழிகளுக்குள் செருப்புகள், கைக்கடிகாரம், மணிப்பேர்ஸ் என்பனவும் மீட்கப்பட்டன.

சாவகச்சேரி மாவட்ட நீதிவானின் உத்தரவின் பேரில் சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சடலங்கள் அடையா

(7ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சுற்றிவளைப்பு

திருகோணமலை, நவ 20

திருகோணமலை நகரில் இராஜவரோதயம் வீதி, வித்தியாலய ஒழுங்கை, வித்தியாலய வீதி ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை 6 மணிக்கு படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது (இ-3-150)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்சல் கவுஸ்
**MAXAAL HOUSE**

09 - 11 - 1996 இல் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வர்ணப் படச்சுருள்கள் பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளன உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.
Nine Hearts, Photo Crome பிரதியாக்கல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

20, யுபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.
(சீமாட்டிக்கு அருகில்) (8987)


# விதை நெல்லைப் பெற்று விதைப்பை ஆரம்பிக்க அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ 20

கமநல சேவை நிலையத்துடன் உடன் தொடர்பு கொண்டு விதை நெல்லைப் பெற்று விதைப்பை உடன் ஆரம்பிக்கும்படி யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் விவசாயிகளை கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

யாழ். மாவட்ட நெற்செய்கை, மழையை நம்பிச் செய்யப்படுவதால் அது ஒரு சூதாட்டம் தான். இம்முறையும் பருவ மழை, காலம் கடந்து பெய்ய ஆரம்பித்துள்ளது. தற்போது பெய்ய ஆரம்பித்துள்ள மழை தொடர்வதற்குச் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

ஆகவே நெல் வயலை இதுவரை விதைக்காத கமக்காரர்கள் தங்கள் பகுதிக் கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு, அடையாளம் காட்டி விதைநெல்லைப் பெற்று உடனடியாக விதைப்பை ஆரம்பிக்க வேண்டும்.

இதைவிட இதுவரை விதைத்து பயிராகக் காணப்படும் வயல்களும் ஒரே புல்லாலும், கோரை அகன்ற இலைகளாலும் மூடப்பட்டுள்ளன. இவை செலவுக்கேற்ப விளைவைத் தரமாட்டாது ஆகவே இப்படியான வயல்களையும், எரிந்து அழிந்து போன வயல்களையும் அழித்து விதைப்பதே சிறந்த வழியாகும்.

தொடர்ந்து மழை பெய்யும் சாத்தியக் கூறுகள் தென்படுவதால், நெல்லை முளை கட்டி ஈரவிதைப்பை மேற்கொள்ளுதல் நன்று.

மணற்பாங்கான வயல்களில் நெல்லை வீசி குப்பைவாரியால் கிளறிவிடவும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 05 — 1946

மறைவு: 21 — 10 — 1996

**அமரர் முத்தையா சிவராசா**
அவர்கள்
(புதைபொருள் ஆராய்ச்சி ஊழியர் - கந்தரோடை)

அன்பின் உறைவிடமாய், பண்பின் புகலிடமாய் பாசத்தின் திருவுருவான எம் தந்தையே, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து முப்பத்தொரு நாள்கள் ஓடி மறைந்தாலும் எம் நெஞ்சங்களில் என்றும் நீங்காது நிறைந்து நிற்பீர்கள் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவன் திருப்பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

அன்புடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம். (43731)



## 90-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணுறவு: 12 — 11 — 1921

விண்ணுறவு: 16 — 08 — 1996

**அமரர் தம்பையா அருளம்பலம்**
(சாமியார்)

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் பார் போற்ற வாழ்ந்த
எம் நேசமிகு ஐயாவே! ஆடி முடிவதற்குள்
உன் ஆட்டத்தை அவசரமாய் முடிக்கவென
காலனவன் வந்தானோ? ஆறுதல் வார்த்தை
ஏதும் நீ சொல்லாமல் ஆறடி மண்ணில்
அமைதியாய் நீ தூங்க ஆறாத்துயரினிலே
அமைதியின்றித் தவிக்கின்றோம் நாங்கள் ஐயா!

எமது தகப்பனார் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினரது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று (20 - 11 - 96) காலையில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

திக்கம்,
அல்வாய். மேற்கு,
அல்வாய். (43733)


## ஒளிவிழா

யாழ்ப்பாணம், நவ 20

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரியின் வருடாந்த 'ஒளிவிழா' இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும். (இ)

## மிதிவெடியில் சிக்கிய மாடு

யாழ்ப்பாணம், நவ. 20

மிதிவெடியில் சிக்குண்டு பசுமாடொன்று பின்னங்காலை இழந்தது.

மந்திகை இராணுவப் பாதுகாப்பு அரண் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள சறவைப் பசுவே வலது பின்னங்காலை இழந்துள்ளது. (இ-15)

## கோப்பாயில் மிதிவெடி

யாழ்ப்பாணம், நவ. 20

மக்கள் புழக்கத்துக்குத் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழைந்த ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

கோப்பாய் வடக்கில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரி ரவீந்திரன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)


விற்பனையாளர்
**தேவை**

உடன் தொடர்பு கொள்க.

**திருமகள் ஸ்ரோர்ஸ்,**
704, கே.கே.எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

**சிற்றம்பலம் அமரேசன்**
(B. A. Dip. - in - Ed.)

திருநெல்வேலிப்பதியில், ஏற்றிவைத்த திருவிளக்கு
அமரேசன் ஆசிரியா அமரர் ஆயினார் என்ற
செய்தி எங்கள் செவியில்
தீப்பிழம்பாய் ஏறியது!
பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகனும்
அரசடியில் வீற்றிருக்கும் சிவகாமசுந்தரியும்
உம்மை அழைத்து உறவாக்கிக் கொண்டனரோ?
விழுது விட்டு வேர்பரப்பி
விரிந்த நிழல் தந்த
பேரால விருட்சமென
எங்களுடன் நீயிருந்தாய்!
அழுது அழுது ஆறாத்துயரினிலே
மெழுகாய் உருகுகிறோம்
உன் ஆன்மாவின் சாந்திக்காய்
தொழுது வணங்குகிறோம்!
தூயவனே வீடு பெறு!

திருநெல்வேலி மக்கள்

(43738)



# 'MERLIN'

## A BRITISH MEDICAL NGO, ARE SEEKING THE FOLLOWING:

1. **Premises For Office / Staff Accomodation**

   Undamaged Modern House - Electrical System (wiring, sockets, fans, lights, etc) in full working order;
   4/5 Bedrooms + 1 Room (Downstairs) for Office use;
   Western - style Toilets, Good Bathroom(s); own water supply (well + tank) in working order;
   Part or Fully furnished; Own walled compound; Jaffna Municipal Area.

2. **Housekeeper (1) One**

   Male or Female; Age 30 to 50 years; English speaking; Knowledge of SriLankan and Western Cooking; Duties include Cooking and Cleaning. Maybe on Live-in basis.

3. **House Boy (2) Two**

   Male; Age 18 to 25 years; Some English Language Ability; Duties include Assisting Housekeeper, Cleaning Compound, Gate Control, Doing Errands, etc.

4. **Driver (1) One**

   Male, Age 25 to 50 years; English speaking; Sri Lankan Driving License Holder; Previous Driving Experience; Preference given to Sinhala speakers;

5. **Security Guard (2) Two**

   Male, Age 25 to 50 years, English speaking; Physically Fit; Previous Experience; Preference given to Sinhala speakers

6. **Interpreters (3) Three**

   Male or Female; Age 30 to 60 years; Fluent in spoken English; Preference given to those with English writing skills / Sinhala speaking / writing skills.

7. **Administrative / Logistic Assistant - (1) One**

   Male or Female; Age 30 to 40 years; Fluent in Spoken and written English; Previous Experience in Office and Logistic Administration Preference given to those with Previous NGO Experience, Computer skills, Knowledge of Sinhala.

Application to T. Kailanathan, Acting Administrative Officer, MERLIN (Jaffna), C/o 51, St. Annes Lane, Chundukuly, Jaffna.

Closing date 1 week from date of publication of advertisement Applications received after this date will not be considered.

(43721)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைத் தடை செய்து தீர்வை அமுல் செய்வதே அரசின் நோக்கம்

## இதன் முன்னோடியே பிரபா மீதான வழக்கு

இலங்கை மத்திய வங்கிக் கட்டடத்தை தகர்த்தது உட்பட உயிர் உடைமைச் சேதங்களை உண்டுபண்ணியது தொடர்பாக புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீது குற்றஞ் சாட்டி வழக்குத் தாக்கலாகியுள்ளது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வேறு ஒன்பது பேரும் மத்திய வங்கித்தகர்ப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். 712 குற்றச்சாட்டுகள் இவர்கள் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

பிரபாகரன் மீது தாக்கலான முதலாவது வழக்கு இதுவல்ல; சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா கொலை வழக்கிலும் கூட அவர் ஒரு சந்தேக நபராகத் தேடப்பட்டார்.

இதனையடுத்து, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விவகாரத்திலும் பிரபாகரன் ஒரு முக்கிய சந்தேக நபராக விசாரணைகளுக்காக இந்திய அரசினால் வேண்டப்படுகின்றார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இலங்கை அரசு பிரபாகரனைக் கைது செய்து ஒப்படைக்க வேண்டுமென்று முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் ஆட்சிக்காலத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது நரசிம்மராவ் மீதே இந்தியாவில் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக வழக்குத்தாக்கலாகியுள்ளது.

அன்று இந்திய அரசு பிரபாகரனைக் கோரிய போது, இலங்கையின் சந்திரிகா ஆட்சியாளர்கள் புலிகள் இயக்கத்துடன் தோழமை பாராட்டி வந்தனர்.

பிரபாகரனை இலங்கைச் சட்டங்களின் கீழ் விசாரணை செய்த பின்னரே இந்தியாவிடம் கையளிப்பது பற்றித் தீர்மானிக்கமுடியும் என்று சந்திரிகா ஆட்சியாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

ஆனால் தற்சமயம் இலங்கை அரசு பிரபாகரனை குற்றவாளிக்கூண்டில் நிறுத்த முற்பட்டுள்ளது.

யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா சுடப்பட்டதையடுத்து பிரபாகரன் ஒரு சந்தேக நபராக வேண்டப்பட்டதும், சந்திரிகாவின் தாயார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அன்றைய ஸ்ரீ. ல. சு. க. ஆட்சியிலாகும்.

அல்பிரட் துரையப்பா கொலை வழக்கில் தேடப்பட்ட பிரபாகரன் வயதில் குறைந்தவராக 'தம்பி' என்ற பெயரில் அப்போது அழைக்கப்பட்டார். அவரிடம் — அன்று — தற்போது இருப்பது போல எண்ணிலடங்காத ஆயுதங்களும் ஆள்களும் இருக்கவில்லை.

### கைது செய்யமுடியாத கெரில்லாத் தலைவர்

தாம் கைது செய்யப்படுவதிலிருந்தும் தப்பும் விதத்தில் தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் அவர் மறைந்து வாழ்ந்தார்.

அவ்வாறு மறைந்து வாழ்ந்த காலப்பகுதியிலேயே தமது போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் கட்டி எழுப்பி, ஒரு சக்தி மிக்க தலைவராகவும் அவர் வளர்ச்சிபெற்றார்.

இன்று பிரபாகரன் உலகிலேயே சிறந்த ஒரு கெரில்லாத் தலைவராக எடைபோடப்பட்டுள்ளார். அத்துடன் இலங்கை இராணுவத்தினால் மட்டுமல்ல; இந்திய இராணுவத்தினால் கூட கைது செய்யப்பட முடியாத ஒருவராகவே பிரபாகரன் இருந்து வருகின்றார்.

இலங்கையில் கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் புலிகள் இயக்கத்தை அழிப்பதுடன், அவ்வியக்கத் தலைவர் பிரபாகரனை உயிருடன் பிடிப்பது அல்லது உயிரற்ற விதத்தில் கைப்பற்றுவதாகவுமே இருக்கின்றது.

> கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினமுரசு' வார சஞ்சிகையில் 'பிரபாகரனை குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முயற்சிக்கும் சந்திரிகா அரசு' என்ற தலைப்பில் 'இராஜதந்திரி' எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.

இலங்கை அரசின் இம்முயற்சியென்பது காலத்துக் காலம் தோல்வியைத் தழுவி வருவதுடன், பாரிய இழப்புக்களை எதிர்கொண்டதாகவுமே இருக்கின்றது.

### மூலவளங்களை ஏப்பம் விடும் பணம்

அத்துடன் புலிகள் இயக்கத்தை அழிக்கும் இலங்கை அரசின் பிரயத்தனமே, பெருந்தொகைப் பணத்தையும், நாட்டின் மூல வளங்களையும் ஏப்பம் விடுவதாகவும் அமைந்துள்ளது.

இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் 4 ஆயிரத்து 300 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை இராணுவச் செலவுகளுக்காகவே ஒதுக்கப்படவுள்ளது.

இந்த ஒதுக்கீடு, மறுபுறத்தே புலிகள் இயக்கத்தை ஒரு பலம் மிக்க அமைப்பாகத் தொடர்ந்து இருந்து வருவதையே வெளிப்படுத்துவதாகவுமிருக்கின்றது.

பிடிபடும் சூழ்நிலை ஏற்பட்டால் தற்கொலை செய்து கொள்வதே புலிகள் அமைப்பின் தாரக மந்திரமாக இருக்கின்றது. அவ்வமைப்பின் தலைவர் முதற்கொண்டு ஏனைய உறுப்பினர்கள் அனைவருமே கழுத்தில் சயனைட் நச்சு வில்லையைத் தொங்கவிட்டுள்ளனர். அத்துடன் சுற்றிவளைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தற்கொலை செய்துகொண்டுமுள்ளனர்.

புலிகள் அமைப்பின் அடிமட்ட உறுப்பினர்கள் மட்டுமல்ல, அதன் முக்கிய தலைவர்கள்கூட தாம் பிடிபடும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போது தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

1987 ஆம் ஆண்டு பலாலி விமானத்தளத்தில் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் ஆறு பேர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர். இவர்களில் புலிகள் இயக்க ஆரம்பகால உறுப்பினர்களான குமரப்பா, புலேந்திரன் ஆகியோரும் அடங்குவர்.

இலங்கைப் படையினர், இந்த புலிகள் இயக்க உறுப்பினர்களை கொழும்பு கொண்டுவர எத்தனித்தபோதே அவர்கள் தம்மை மாய்த்துக் கொண்டனர்.

இது தவிர, மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்தியக் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது, புலிகள் அமைப்பின் முக்கிய தலைவரான கிட்டு என்று அழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமார், தாம் இருந்த கப்பலையே குண்டு வைத்துத் தகர்த்து தற்கொலை செய்து கொண்டார்.

எனவே புலிகள் அமைப்பின் தலைவரான பிரபாகரனோ அல்லது அவரோடு தேடப்படுகின்ற ஏனைய உறுப்பினர்களோ கைது செய்யப்படும் சந்தர்ப்பம் ஏற்படுமானால் தற்கொலை செய்யும் முடிவுக்கே வருவார்கள் என்று நம்பமுடியும்.

### மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கு

இந்நிலையில் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன்மீதும் அவரது இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் 10 பேர் மீதும் மத்திய வங்கித் தகர்ப்புத் தொடர்பாகத் தாக்கலாகியுள்ள வழக்கு, பிரபாகரனோ அல்லது ஏனைய சந்தேக நபர்களோ நீதிமன்றம் வராத நிலையிலேயே நடத்தப்படமுடியும்.

புலிகள் அமைப்புடன் பேசாதவிடத்து வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முடியாது என்று திடமாக நம்பிய இன்றைய ஆட்சியாளர்கள், புலிகள் இயக்கத்தலைவரை குற்றவாளிக் கூட்டில் ஏற்றுவதற்கான திட்டங்களை வகுத்துள்ளனர்.

இதன் மூலம் ஆட்சியாளர்கள் புலிகள் இயக்கத்தை சர்வதேச ரீதியாக ஒரு பயங்கரவாத அமைப்பென்று சித்திரிக்க முன்வந்துள்ளதையே ஊகிக்க முடிகின்றது.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தாக்குதல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பட்சத்தில், அதுவோர் நீண்ட விசாரணைக் காலத்தையே கொண்டிருக்கும் ஏனெனில் 712 குற்றச்சாட்டுக்கள் மத்திய வங்கிச் சம்பவம் தொடர்பாக புலிகள் இயக்கம் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை பூர்த்தியாகி புலிகள் அமைப்பு குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில், அதனை இலங்கையில் தடை செய்வதே ஆட்சியாளரின் நோக்கமாகவும் இருக்க முடியும்.

இதன் பின்னர் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டிய நிலைப்பாட்டை முழுமையாக நிராகரித்து. தமது தீர்வுத் திட்டத்தை, அமுலாக்குவதும் ஆட்சியாளரது திட்டமாக அமையமுடியும்.

### ஆணைக்குழுக்கள்

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைவரத்தைநோக்கும்போது பல்வேறு விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களும் இயங்கி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த விசாரணைக் கமிஷன்கள் மூலமாக ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சியினரைக் குற்றவாளிகளாகக் காண்பதிலேயே முனைப்பாக இருக்கின்றனர்.

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் கொழும்பின் சுற்றுப்புறத்திலுள்ள பட்டலந்த என்ற இடத்தில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சித்திரவதை முகாம் ஒன்றை நடத்தினார் என்ற வகையில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இந்த முகாமில் சித்திரவதை செய்யப்பட்டோர், மற்றும் அங்கிருந்து தப்பி வந்தோர் வழங்கிவரும் சாட்சியங்களை அவதானிக்கையில், பல நூற்றுக்கணக்கானவர்கள் அம்முகாமில் கொல்லப்பட்டிருக்கலாமெனக் கருத முடிகின்றது.

எனவே பட்டலந்த சித்திரவதை முகாம் மீதான குற்றச்சாட்டுக்கள் முழு அளவில் நிரூபணமாகி அம்முகாமின் சூத்திரதாரியாகச் சந்தேகிக்கப்படும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவரைத் தண்டித்து அவர் தலைமை தாங்கும் ஐ.தே.கவை இன்றைய ஆட்சியாளர்கள் ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்வார்களா? என்ற கேள்வி எழும்பவே செய்கின்றது.

### பொது நூல் நிலையம் எரிப்பு

பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும், யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாகவே முதலாவது ஆணைக்குழு விசாரணை நடத்தப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை அது பற்றிய பேச்சு எதனையும் காணவில்லை.

யாழ்ப்பாணத்தில் பொது நூலகம் மட்டுமல்ல— வேறு பல பெறுமதிமிக்க கட்டடங்கள், உயிர், உடமைச் சேதங்களுக்கும் அன்றைய ஐ.தே.க.வினர் மட்டுமல்ல; இன்றைய ஆட்சியினர்கூட பொறுப்பாளிகளாகவே இருக்கின்றனர். எனவே வடக்கே இடம்பெற்ற எண்ணிலடங்காத உயிர் – உடைமைச் சேதங்கள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத ஆட்சியாளர்கள், கொழும்பில் மத்திய வங்கிக் கட்டடம் தகர்க்கப்பட்டது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய முன் வந்துள்ளனர்.

இவ்வழக்கின் மூலம் வடக்கு — கிழக்கில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் அதேசமயம், புலிகள் அமைப்புடனான பேச்சுக்களுக்கான கதவுகளையும் மூடிவிடவே ஆட்சியாளர்கள் எத்தனிப்பதை அவதானிக்க முடிகின்றது.

தன்னை ஒரு முழுமையான ஆயுதப் போராட்ட அமைப்பாக அறிவித்துள்ள புலிகள் இயக்கத்தினர் அரசியல் அரங்கிற்கு கொண்டுவரும் முயற்சிகளையே ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமே தவிர, அந்த அமைப்பை ஓர் ஆயுதப்போராட்ட சக்தியாக தொடர்ந்து இருப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கலாகாது. ★

---


அரசாங்க அறிவித்தல்

**ஏலவிற்பனை**

சுகாதார சேவைகள் பிரிவு — யாழ்ப்பாணம்

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் பாவிக்கப்பட்ட பழைய இருநூறு (200) அஸ்பெற்றோஸ் கூரைத் தகடுகளும், இருபத்திமூன்று (23) சோடி மூலைத் தகடுகளும் 29 – 11 – 1996 ஆந் திகதி மு. ப. 10 00 மணி அளவில் அதே வைத்தியசாலையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் மேற் குறிப்பிட்ட பொருள்களை வாங்குபவர்கள் உரிய பணத்தை உடன் செலுத்திப் பொருள்களை அன்றே எடுத்துச் செல்ல வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி, வை. ஸ்ரீ காந்தா,
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

(சி3518)


---


**1-ம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு: 21 — 09 — 1912

உதிர்வு: 01 — 12 — 1995

**அமரர் தம்பு நவரத்தினம்**
(கோண்டாவில் கிழக்கு)

திதி: 20 - 11 - 96

அளவற்ற அன்பு வைத்து பலர்
போற்றும் பண்பைப் பெற்று குறை
வற்ற பாசம் வைத்து செழிப்புடன்
வாழ வைத்த அன்புத் தெய்வமே!
தங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகிறோம்.

பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(43719)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழா வாழ்த்து



மிருசுவில் பங்குத் தந்தை
அருட்திரு
**இ. பீற்றர் துரைரத்தினம்**
அடிகளார்

இறை ஆட்சியை இப்பூவுலகில் நிலைநிறுத்தும் தமது இடையறாப் பணிவாழ்வில் இருபத்தைந்தாவது ஆண்டை நிறைவு செய்யும் இன்றைய தினத்தில் — அவரை மிருசுவில் பங்கு மக்கள் உளங்கனிந்து முகம் மலர்ந்து வாழ்த்துகின்றார்கள். மனித மாண்பை உயர்த்தும் அவரது பணி தொடர இறையருள் அவருக்கு நிறைவுறப் பொழியப்படுவதாக.

மிருசுவில் பங்கு மக்கள்

(சி-3516)

# வெள்ளிவிழா நாயகன்

**வண.பிதா. பீற்றர் துரைரத்தினம்**
அடிகளாரை

நீண்டகாலம் பணிசெய்ய இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

சூசைமுத்து குடும்பத்தினர்
மயிலிட்டி.

(43707)

# வாழ்த்து

இறை பணியில்
## வெள்ளி விழாக் காணும்

மிருசுவில் கத்தோலிக்க பங்குத் தளத்தின் பங்குக் குரு
அருட்திரு
**இ. பீற்றர் துரைரத்தினம்**
அவர்களை
இறையாசி பெற்று பணி தொடர வாழ்த்துகின்றோம்.

கிறிஸ்தவ ஒன்றியம்,
யா/ உசன் இராமநாதன்
மகா வித்தியாலயம்.

சி/3517)

## குருத்துவப் பணியில்
# வெள்ளிவிழாக் காணும்

அருட்தந்தை
**பீற்றர் துரைரத்தினம்**
அடிகளாரை வாழ்த்தி

ஆற்றல் பெற்றிலங்கும் அருட்தந்தை
பீற்றர் துரைரத்தினம் பேர் புகழ் வாழி!
தமிழ் மணம் கமழும் தனியொரு மகவே
உமதுயர் பதவியைப் புகழ்ந்துளம் மகிழ்வோம்
நிறை மன வள்ளல் நீ செய் நலன்களை
அத்தனின் திருமுன் நித்தமும் நினைந்து
இத்தரை நீடு நீ வாழ்ந்திட வேண்டி
நன்றி நன்றியென் றின்றுயாம் நவின்றோம்
அன்போடர்ப்பணம் வணக்கம் குருத்துவ
வெண்பொன் விழாவின் நாயக! வாழி!

வாழ்த்துபவர்:

சி. வின்சென்ற் குடும்பத்தினர்

"றெஜினா வாசா",
பெரிய தோட்டம்,
கரவெட்டி.

(43646)

# மாடுகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து இல்லை

அராலி, நவ. 20

மழை காலத்தில் மாடுகளுக்கு ஏற்படக்கூடியதொண்டையடைப்பான் நோய் தடுப்பு மருந்துக்கு, வட்டுக்கோட்டை கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாடுகளுக்குத் தடுப்பு ஊசி போடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மருந்து இன்மையால் அவ்வேலை இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. (இ-12)

# உரம் இல்லை

வலி. தென்மேற்கு, நவ 20

உடுவில் கமநல சேவை நிலையத்தில் உரவகைகள் அறவே இல்லை.

இதனால் பயிர்களுக்கு உரம் இடமுடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

இந்தக் கமநல சேவை நிலையத்தில் களை நாசனி, பூச்சி நாசனி ஆகியவையும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-145)

# குருத்துவகல்லூரி

வடமராட்சி, நவ. 20

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மக்கள் இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்து இக் கல்லூரி மூடப்பட்டு கிளிநொச்சி உருத்திரபுரத்தில் இயங்கி வந்தது. (இ)

# முத்திரைக்கு தட்டுப்பாடு

நவாலி, நவ. 20

யாழ். நகரிலுள்ள தபாலகங்களில் மீண்டும் முத்திரைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-100)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

# பொருள்கள் தேவை

நல்ல நிலையில் உள்ள பாவனைக்குகந்த பின்வரும் பொருள்கள் தேவைப்படுகின்றன.

1) அலகு நீளம் குறைந்தது 300 மில்லி மீற்றர் உள்ள செடிகள் வெட்டும் கத்தரிக்கோல் (Garden Scissors)
2) குறைந்தது 9 மீற்றர் நீளமுள்ள ஏணி. நீட்டப்படக்கூடிய ஏணி விரும்பத்தக்கது. (Telescopic type)

இவற்றை வைத்திருப்போர் 27 - 11 - 96 இற்கு முன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளருக்கு நேரடியாக அல்லது எழுத்து மூலம் சகல விவரங்களுடனும் விண்ணப்பிக்கவும்.

— பதிவாளர் —

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
த. பெ. இல: 57
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-3523)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 25 — 10 — 1976 | 20 — 11 — 1995 |

## செல்வி விஜித்தா சந்திரராஜா

( 1995 A/L மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.)

காலமெல்லாம் கண்ணியமாய்ப்
பழகிவந்த உன் முகம்
கார்த்திகைத் திங்களன்று
பாதியில் மறைந்தாலும்
எம் ஜென்மம் உள்ள வரை
உன் ஜீவன் வாழும் இங்கே.

தாய், (தவம்) பெரியப்பா,
குடும்பத்தினர்.
மற்றும் உறவினர்.

கேணியடி,
அரசடி வீதி,
திருநெல்வேலி.

[43699]

யாழ்ப்பாண
மாநகரசபை

# வழங்குநர்களை பதிவு செய்தல் - 1997

பின்வரும் பொருள்கள், சேவைகளை வழங்கத் தகுதியுடையனவையும், இதற்காக யாழ். மாநகரசபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்புவனவுமான நிறுவனங்கள் ரூபா 250/- ஐ பதிவுக் கட்டணமாகச் செலுத்தி உரிய படிவங்களை யாழ். மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்று 15-12-96-க்கு முன் தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவுக் கட்டணங்களை காசோலைமூலம் செலுத்த விரும்புபவர்கள் காசோலைகளை "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற பெயரில் வழங்க வேண்டும்.

பொருள்கள்:

01. காகிதாதிகள், எழுது பொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்தமருத்துவ மூலிகைகள், மருந்துகள்
05. கோல உடைத்துணிகள், யன்னல் சீலைகள் முதலியன
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற் பொருள்கள்
07. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, கூரைத்தகடுகள் முதலியன)
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09. கற்கள், மணல், ஓடுகள் முதலியன
10. நீர்வழங்கு பொருள்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன
11. வாகன உதிரிப்பாகங்கள், பற்றறிகள், ரயர் ரியூப் முதலியன.
12. மின்சார இயந்திரப் பொருள்கள், மின்கருவிகள்
13. விறகு, தேங்காய் மட்டை
14. எரிபொருள் உராய்வு நீக்கிகள், கிறிஸ்
15. இரும்புப் பொருள்கள், தெளிகருவிகள்
16. பனைமரங்கள், சலாகைகள், தீராந்திகள், பலகைகள் முதலியன
17. நூலகங்களுக்குரிய நூல்கள்.

சேவைகள்:

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
06. ஏற்றியிறக்கல் வேலைகளும் பாரங்குறைந்த வாகனங்கள் வாடகைக்கு விடுதல் (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரைக்ரர் வாடகைக்கு விடல்)
07. கோலவுடை தைத்தல்

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

1996-11-12.

(சி-3512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரா இராணுவ உதவி கோருகிறது ஆந்திரா

## நக்ஸலைட் தாக்குதல் அதிகரிப்பு

ஹைதராபாத், நவ. 20
ஆந்திரப் பிரதேசத்தில் தீவிரவாத நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டுவதற்கு 2 ஆயிரம் "பரா' இராணுவத் துருப்பினரையும், 40 கோடி ரூபா நிதியையும் தந்துதவுமாறு மத்திய அரசாங்கத்தை மாநில அரசு கேட்டுள்ளது.

மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இந்தியப் பிரதமரையும், உள்த்துறை அமைச்சரையும் சந்தித்து இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

சமீபத்தில் ஆந்திரப் பிரதேசத்தில் நக்ஸலைட்டுக்களின் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருவதை அடுத்தே கூடுதல் பாதுகாப்புக்கு' பரா' இராணுவத்தின் உதவியை மாநில அரசு கோரி உள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலத்தில் இடம் பெற்ற இரு சம்பவங்களில் 14 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-10)

# அணு ஆய்வின் போது 17 பேர் இறந்தனர்!

## நஷ்டஈடு வழங்க கிளின்ரன் இணக்கம்

வாஷிங்டன் நவ. 20
வல்லரசுகளுக்கிடையே ஆதிக்கப் போட்டி இருந்த காலத்தில் 18 அமெரிக்கர்களின் உடல்களில் இரகசியமாக ''புளுட்டோனியம்'' என்ற அணுக்கதிர்ப் பொருளை ஊசி மருந்து மூலம் செலுத்தி அதனால் ஏற்படும் பாதிப்பு எவ்வாறு இருக்குமென அமெரிக்காவின் றோசெஸ்டர் பல்கலைக் கழகம் சோதனை செய்தது.

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 18 பேரில் 17 பேர் அணுக்கதிர்களின் தாக்கத்தால் இறந்து போனார்கள்.

இறந்தவர்களில் 12 பேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு கிளின்ரன் அரசு ஒத்துக் கொண்டுள்ளது. மற்றைய 5 குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடுகோரி முறையீடு செய்வதற்கு தாமதம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்படும்.

(இ-10)

# உலக அரங்கில்

## பண்டைய இளவரசர்களின் சடலங்கள்

கெய்ரோ, நவ 20
கிறிஸ்துவுக்கு முன் சுமார் 2600—2180 ஆண்டுவரை எகிப்து நாட்டை ஆண்ட எப்ஸி என்ற பேரரசின் 6 இளவரசர்களுடைய கல்லறைகள் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்களால் நைல் நதிப் பள்ளத்தாக்கில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

''மம்மி'' என்றழைக்கப் படும் பாதுகாக்கப்பட்ட உடல்களின் பகுதிகளும் தங்கத்தால் செய்யப்பட்ட பொருள்களும் வேறு பல புராதனப் பொருள்களும் கல்லறைத் தோட்டத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(இ-10)

# பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு மீண்டும் ஐ.நா. பதவி

ஐ. நா. பொதுச்செயலர் பூட்ரஸ் பூட்ரஸ்காலி தொடர்ந்தும் 2 ஆவது முறை யாகப் பதவியில் தொடர்வதா இல்லையா என்பது தொடர்பான வாக்கெடுப்பு நேற்றிரவு நடைபெறுவதாக இருந்தது.

அமெரிக்கா தவிர்ந்த ஏனைய அனைத்து நாடுகளும் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காலிக்கு எதிராக வாக்களிக்குமாறு அமெரிக்கப் பிரதிநிதிக்கு வாஷிங்டன் உத்தர விட்டிருந்தது.

இந்த வாக்கெடுப்பு அமெரிக்காவின் தன்னிச்சையான போக்கினைத் தனிமைப் படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என எகிப்திய தூதுவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(இ-10)

## முஜிபுர் படுகொலை:

# சந்தேக நபரை விடுவிக்க உயர் நீதிமன்று உத்தரவு

டாக்கா, நவ. 20
முஜிபுர் ரஹ்மான் படுகொலையில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஓய்வு பெற்ற மூத்தராணுவ அதிகாரிஹயிரோ ஷெமானை சிறையில் தடுத்து வைக்க பங்களாதேஷ் அரசுக்கு எந்தவித காரணமும் இல்லை என அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1975 ஆம் ஆண்டில் இடம் பெற்ற முஜிபுர் ரஹ்மானின் படுகொலையுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இதுவரை 3 இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஜிபுர் ரஹ்மானின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்ய பங்களாதேஷ் அரசால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை ஆகும்.

இந்தத் தீர்ப்பையடுத்து இப்படுகொலை தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 சிவிலியன்களும் விடுதலையாவதற்கு சட்டத்தின் கதவு திறக்கப்பட்டுள்ளது என பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார்.

## பாக். தேர்தலை கண்காணிக்க அவதானிகள்

பாகிஸ்தானில் அடுத்த பெப்ரவரியில் நடைபெறவுள்ள தேர்தலை அவதானிப்பதற்கு வெளிநாட்டு அவதானிகள் அழைக்கப்படுவார்கள் என ஜனாதிபதி பாரூக் அஹமட் லெஹாரி தெரிவித்துள்ளார்.

தேர்தல் குறித்த திகதியில் நடைபெறும் என மீண்டும் உறுதியளித்துள்ள ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமாகவும் பக்கச்சார்பின்றியும் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

(இ-10)


யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இளைப்பாறிய அதிபர்
அருட்செல்வி M. ஜெறோம்
அவர்களது
சேவைநலம் பாராட்டுவிழா

30 - 11 - 96 இல் நடைபெறவுள்ளது. அதில் பங்கு கொள்ள விரும்பும் முன்னாள் பெற்றோர்களை 23—11—96 சனிக்கிழமை காலை 10 மணிக்கு (பழைய நேரம்) பாடசாலையில் ஒன்று கூடுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி:
க. தேவராஜா
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
(43713)



வேலணை கிழக்கு
தவிடு தின்னி பிள்ளையார்
ஜீருனோத்தாரண அஸ்டபந்தன
பிராயச்சித்த
மகா கும்பாபிஷேக
விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான தாது வருடம் கார்த்திகை மாதம் 5 ஆம் நாள் இன்று 20-11-96 புதன் கிழமை பி. ப 3 மணியளவில் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி 21-11-96 வியாழக்கிழமை எண்ணெய் சாத்துதல் இடம்பெறும்.

கார்த்திகை மாதம் 7-ஆம் நாள் 22 - 11 - 96 வெள்ளிக்கிழமை காலை 8.32 மணி தொடக்கம் 9 47 மணி வரை உள்ள தனுலக்கின சுப முகூர்த்த வேளையில் தவிடு தின்னி பிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகம் நிகழும்.

அத்தருணம் பிள்ளையார் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு பிள்ளையாரின் அருள் ஆசியைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

- நிர்வாகத்தினர்.
(45727)


# 8 தொழிற் பயிற்சி நிலையங்கள் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டு தொழிற் பயிற்சி நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழில் நுட்ப அதிகார சபையினால் இந்த பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப் படவிருக்கிறது.

மூன்று கணனி பயிற்சி நிலையங்களும், மூன்று ஆங்கில, தமிழ் தட்டச்சு நிலையங்களும், 2 கட்டட, நிர்மாணத்துறை பயிற்சி நிலையங்களும் யாழ். மாவட்டத்தில் அமைக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கணனி நிலையங்களுக்காக கணனிகளும், கட்டட, நிர்மாணப் பயிற்சிக்கான கருவிகளும், தட்டச்சு பயிற்சிக்கான இயந்திரங்களும் கொழும்பில் தயாரான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — இந்தப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வரும் பணியில் இந்த அமைப்பின் யாழ். அலுவலக அதிகாரிகள் மேதனப் போக்கைக் கடைப் பிடித்து வருவதாகவும் கூறப் பட்டது,

(இ-3)

## காரைநகரில் பிரஜைகள் குழு

யாழ்ப்பாணம், நவ. 20
காரைநகரில் உள்ள 8கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பிரஜைகள் குழுக்களை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ)

## மீனுக்குத் தட்டுப்பாடு

வலிகாமம் பகுதியில் தற்போது மீனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியிலுள்ள மீனவர்கள் குறிப்பாக நவாலி, ஆனைக்கோட்டை, சாவற்கட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கடந்த சில நாள்களாக [illegible] இதுவே இதற்குக் காரணமென்று தெரிவிக்கப் படுகிறது.

(இ-100)

# மாணவருக்கான இலவச சீருடைகள்

## இவ்வாரம் விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கான இவ்வருடத்துக்கு வழங்கப்படவேண்டிய இலவச சீருடைகள் இவ்வாரத்தில் வழங்கப்பட உள்ளன.

ஏற்கனவே பல நாள்களாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த சீருடைகளை எடுத்து வழங்குமாறு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தினர் கோட்டக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிபாளர்களுக்கு பணிப்புரை வழங்கி உள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வந்து ஒவ்வொரு கோட்டத்துக்கும் என ஒதுக்கப்பட்டுள்ள சீருடைப்பெட்டிகளைப் பொறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கான சீருடைகளை வழங்க ஏற்பாடாகி இருந்தது

(இ-152)


வைர விழாக் காணும்
யா| தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி சாரணர் குழு

1936-ம் ஆண்டு அன்றைய சாரணர் தலைவரும் பிற்காலத்தில் மகாஜனக் கல்லூரியின் சிற்பியுமாகிய அமரர் உயர்திரு தெ. து ஜெயரத்தினம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சாரணர் குழு அறுபது ஆண்டுகள் கடந்து வைரவிழாக் காணுகிறது மேற்படி சாரணர் குழுவை மேலும் பல்லாண்டு சாரணர் சேவையை செய்து எல்லோரது வாழ்த்தையும் பெற வாழ்த்துகின்றோம்.

திட்டமிடல் பிரிவு,
கோட்டக் கல்வி அலுவலகம்,
தெல்லிப்பழை.
(43734)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், யன்னல் நிலைகள், கதவுகள் (வேம்பு), அம்மி, ஆட்டுக்கல், மின் விசிறிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- Dr. கந்தையா 'இல்லம்' சந்திரகிரி' நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (சி/3319)

1½Kg மிற்கு மேற்பட்ட நிறையுடைய இறைச்சிக் கோழி புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு முகவரிகள்: R.S.K கோழிப் பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி), R.S.K கோழிப் பண்ணை, தபாற் கந்தோர் வீதி, மானிப்பாய். (விதானை வளவு, மானிப்பாய்) (43614)

## தவறிவிட்டது

சிவப்புக்கல் பதித்த தோடு [சோடி] யாழ். பிரதான வீதி, கோவில் வீதி சந்திக்குமிடத்தில் மறையியற் கல்லூரிக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து செல்வி மயில்வாகனம் வீதி, அபிவிருத்தித் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43714)

## வீடு விற்பனைக்கு

கஸ்தூரியார் வீதி - யாழ். இந்துவுக்கு அண்மையில் நவீன மேல்மாடி வீடும் கச்சேரி நல்லூர் றோட்டில் புதிய வீடும் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: S. பஞ்சரத்தினம் மே/பா. K.S முத்துலிங்கம், இல. 206, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (43724)

## மணிக்கூடு திருத்துதல்

சகல விதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில், குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். பழுதடைந்த கடிகாரங்கள் உதிரிப்பாகத்திற்காக வாங்கப்படும். கஜன்ஸ் வாச் வேக்ஸ், 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு அருகாமை) (43712)

## ஆங்கிலம - கணிதம்

O/L Distinction, Credit பெறுபேறுடைய (ஆண்டு 10, 9 உட்பட) வினாவிடை தினமும் இரு மணித்தியால வீதம் கற்பிக்கப்படும். ஆசிரியர், இல: 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (43704)

## வரலாறு

ஆண்டுகள் 9, 10, 11 வரலாறு (வினா விடைகள்) ஆசிரியர் கே. எஸ். முத்துலிங்கம், (யாழ். நகரில் பெருந்தொகையானோருக்கு அதிவிசேட பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுப்பவர். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (43723)

## வெளிவந்து விட்டது!

1997 ஆம் ஆண்டுக்குரிய இரகுநாத ஐயர் வாக்கிய பஞ்சாங்க மாதக் கலண்டர் வெளிவந்து விட்டது. விலை ரூபா 60.00 வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும் மற்றும் சகல விதமான புத்தகங்களும், ஸ்ரேசனறி சாமான்களும் விற்கப்படும். விவரங்களுக்கு: சோதிடவிலாச புத்தகசாலை, சே. கே. எஸ். வீதி, கொக்குவில். (43706)

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி முருகேசு நாச்சியார் (பூமணி)

பிறப்பு: 18-08-1924 இறப்பு: 13-10-1996

ஆரியகுளத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முருகேசு நாச்சியார் வன்னியில் காலமானார். அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 20-11-96 (புதன்கிழமை) அவரின் இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சகோதரர்கள்:-

க. க. செல்லையா, க. துரைராசா
க. செல்வம், க. செல்வமணி
க. சின்னராசா

காலஞ்சென்றவர்களான

க. செல்லத்துரை, க. பொன்ராசா
க. கணேசன், க. பிள்ளையம்மா

பிள்ளைகள் :-

மு. பாலசிங்கம். மு. தனசிங்கம்
மு. குணசிங்கம், மு. இரத்தினசிங்கம்

அழைப்பாளர்:
தனசிங்கம் — பேபி குடும்பம்.
கனகரத்தினம் — விக்னேஸ்வரி குடும்பம்.

83/9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம்) (43715)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 10 — 1925



மறைவு: 22 — 10 — 1996

## திருமதி இளையபெருமாள் சின்னக்கண்மணி

திதி: 21 - 11 - 1996

ஆலமரமென வளர்ந்தீர்கள்
விழுதுகளென விதை பரப்பினீர்கள்
நாம் இன்று உலகெலாம் பரந்து
என்றும் உங்கள் நினைவுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

அமர சேனாபதி,
வைகுண்டம்,
வல்வெட்டித்துறை. (43702)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்ததின வாழ்த்துக்கள்

## ★ திரு. செ. பிரசாத் ★

யாழ் போதனா வைத்தியசாலை எழுதுவினைஞரும், வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தா சபை முன்னாள் செயலாளரும், புதிய விஞ்ஞானக் கல்லூரி ஆங்கில ஆசிரியருமாகிய திரு. செல்லத்துரை பிரசாத் இன்று புதன்கிழமை (20 - 11 - 96) தனது 25 வது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறோம்.

சக காரியாலய உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.
(சி/5510) யாழ். போதனா வைத்தியசாலை

உ
ஓம் விராட்விஸ்வ பிரமே நமக

## ★மங்களகரமான திறப்பு விழா★

நிகழும் தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 5ஆம் நாள் (20 - 11 - 96) புதன் கிழமை காலை 7 மணி முதல் 10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஆரம்பிக்கப்படும்.

# முருகன் நகை மாடம்

இல. 216, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (கிளை)

அசல் 22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கும், உடன் பெற்றுக்கொள்ளவும், பழைய பவுண், பொன், வெள்ளி வாங்கவும், விற்பனை செய்யவும், நீங்கள் நாட வேண்டிய இடம்;

எமது தலைமையகம்:-

## முருகன் நகைத்தொழிற்சாலை

இல. 5, மானிப்பாய் வீதி,
கைதடி சந்தி, கைதடி.

உரிமையாளர்:
பா. சண்முகவிநாயகமூர்த்தி
(பா. மூர்த்தி) (43718)

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 20 — 07 — 1984



ஆண்டவன் மடியில்: 20 - 11 - 1989

## செல்வி சித்திரகலா அமரசேனாபதி

மலர்ந்தும் மலராத பாதி
மலர்போல மறைந்த
இளந்தென்றலே! - நம்
மனதில் எந்நாளும்
மாறா எழிலோடு
சிரிக்கும் சித்திரமே!
சுவர்தான் மறைந்தாலும்
சோகம் சூழ்ந்தாலும்
சித்திரம் மறையவில்லை - உன்
சுந்தரம் குறையவில்லை
மந்திரமாய் எங்கள்
மனங்களில் தவழும்
மகளே நீ வாழி! - தங்கத்
தமிழே நீ வாழி!

உங்கள் பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, ஆசை அண்ணா,
பெரியப்பா, மாமி குடும்பம்,
உறவினர்கள்.

இ. அமரசேனாபதி,
''சுதாபவனம்''.
மயிலியதனை,
தொண்டமானாறு. [43701]

உதயன்

## நியாயமான கோரிக்கை

இடம் பெயர்ந்த மக்களின் குறைகளை நேரில் அறிவதற்கு, இடம்பெயர்ந்த மக்களின் விவகாரங்களுக்குப் பொறுப்பான ஐ. நா. அமைப்பின் பிரதிநிதியை இலங்கைக்கு அழைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ஐ. நா. அதிகாரியை அழைத்தால், வடக்கு—கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களிலும், ஏனைய தங்குமிடங்களிலும் அனுபவிக்கும் கஷ்டங்களை அவர் நேரில் அறிவதற்கு வாய்ப்பு உண்டாகும் என்பது நீலனின் வாதம்.

வடக்கு - கிழக்குப் போரினால் பெருமளவில் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்களே. வாழ்க்கையின் ஓரத்துக்கே செல்லுமளவுக்கு, வாழ்க்கையே வேண்டாம் என்று விரக்தி அடையும் அளவுக்கு அவர்கள் அகதிகளாகி அவலப்படுகிறார்கள். தமிழர் சமூகத்தின் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமைக்கு முடிவு வராமல் அது தொடரும் சாத்தியங்களே தென்படுகின்றன இது பெரும் துரதிர்ஷ்டமாகும்.

இடம்பெயர்ந்த மக்கள், அகதிகள், தமது அன்றாட வாழ்க்கையில் தாங்க முடியாத துன்ப, துயரச் சுமைகளுக்குத் தலை கொடுக்க வேண்டியுள்ளது. அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை வழங்குவதிலும் ஏனோ தானோ என்ற நிலை உண்டு.

ஆனால் அதனை ஒப்புக்கொண்டு அவர்களையும் மக்களாகக் கருதி குறைகளை நீக்குவதிலும் உதவுவதிலும் போதிய அக்கறை காட்டப்படுவதில்லை. அகதிகளைச் சாகவிடவில்லை; பராமரிக்கிறோம் என்ற பெயருக்காகக் காரியங்கள் நடப்பதாகவே தெரிகிறது.

எனவே அகதிகள் சரியாகக் கவனிக்கப்படுகின்றார்களா, அவர்களின் தேவைகள் உரிய நியம முறைப்படி நிறைவேற்றப்படுகின்றனவா, பாதுகாப்புக் காரணம் என்ற பேரில் அவர்களின் தனிப்பட்ட அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றனவா என்பதனை நேரில் அறிந்து நிர்ணயிக்க — முடிவு சொல்ல —

இது விடயத்தில் தேர்ச்சியும், பரந்த அனுபவமும் உள்ள ஐ. நா. அதிகாரியே பொருத்தமானவர்.

நாம் எந்த வசதிகளைச் செய்தாலும், உதவிகளை வழங்கினாலும் அகதிகள் தரப்பில் குறையும் பிழையுமே கண்டுபிடிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக நாம் எத்தனைச் செய்வது என்று அரச தரப்பினரின் முணுமுணுப்பை நிறுத்தவும் இது உதவும்.

உண்மை நிலை கண்டறியப்பட்டால் தான் உரிய பணியை தக்க முறையில் செய்யலாம்.

அகதிகளின் நலன்கள் உரியவாறு கவனிக்கப்பட்டால், அவர்கள் குறை கூறுவதையும் தாம் புறக்கணிக்கப்படுவதாக உணர்வதையும் தவிர்க்க முடியும்; தடுக்க முடியும்;

எனவே நீலனின் நியாயமான கோரிக்கைக்கு அரசு இணங்க வேண்டும். இல்லையேல் அரச தரப்பில் நெஞ்சு குறுகுறுக்கிறது என்பதாகி விடும்.

# புலிகள் தாக்கி மக்கள் மரணமாவது குறித்து மௌனம் சாதிப்பது ஏன்?

## இராணுவத் தரப்பு அறிக்கையில் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 20

கடந்த இரண்டு மாதங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய பொது இடங்களில் குண்டுகளை வெடிக்க வைத்தல், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுதல் போன்ற வன்செயல்களால் யாழ்ப்பாணப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் காயம் அடைந்தும் உள்ளனர்.

இராணுவத் தரப்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட மின்கம்ப மரண தண்டனை மற்றும் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லல் ஆகியவற்றுக்கு மேலதிகமாகவே மேற்கூறிய வன்முறைகள் நடத்தப்பட்டுள்ளன — என்றும் அந்தக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரஸ்தாப செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: -

கடந்த செப்ரெம்பர்மாதம் 17 ஆம் திகதி பாதுகாப்புப் படையினருக்கு இலக்கு வைத்துப் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி ஒன்று வெடித்ததனால், அவ்வழியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளம் பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த ஒக்ரோபர் 9 ஆம் திகதி கலட்டிச் சந்தியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட பல்கலைக்கழக மாணவன் ராஜதுரை சிவானந்தன் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த மாதம்16 ஆம்திகதிசங்கரத்தைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள்மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் யாழ். நகர மத்தியில் விடுதலைப் புலிகள்மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலினால் பதினொரு பொதுமக்கள் காயமடைந்தனர். அவ்வாறு காயமடைந்தோரில் 8 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக நோயாளர் பிரிவு வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நவம்பர் மாதம் இரண்டாம் திகதி யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலில் இரண்டு இராணுவ வீரர்களும், 11 பொது மக்களும் காயமடைந்தனர். காயமுற்றவர்களில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இம் மாதம் 9 ஆம் திகதி சலுசலா விற்பனை நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலில் பெண்மணி ஒருவர் கொல்லப்பட்டதோடு, மேலும் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இவற்றைவிட திருநெல்வேலிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் இம்மாதம் 15 ஆம் திகதி மேற்கொண்ட கைக் குண்டுத் தாக்குதலினால 5 பொதுமக்கள் காயமடைந்தனர்.

### மக்கள் மீது அக்கறையில்லை

இந்தச் சம்பவங்களை உற்றுநோக்கும் போது தமிழ் மக்களின் மீட்பாளர்கள் தாமே எனக் கூறிக்கொள்ளும் விடுதலைப் புலிகளுக்குப் பொது மக்களைப் பற்றிய அக்கறையோ, அனுதாபமோ இல்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது.

பாதுகாப்புப் படையினரால் விளையும் சிறு குற்றங்களைக் கூட பாரிய அளவில் காண்பித்து, அவற்றைச் சர்வதேச ரீதியில் பகிரங்கப்படுத்தும் அவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய வன்முறைகளைக் கண்டு மக்கள் மௌனம் சாதிப்பது ஏனென்பது பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாணவி கிருஷாந்தி குமாரசாமி உட்பட நான்கு பேரினதும், ரஜினி வேலாயுதபிள்ளை என்ற யுவதியினதும் கொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களே பாதுகாப்புப் படையினர் தான். இச்சம்பவங்கள் பற்றிய தகவல்களை வெளியிட்டவர்களும் இராணுவத்தினரே ஆவர்.

இராணுவத்தினர் இவ்வாறு செய்ததன் பின்னர் அச்சம்பவம் தொடர்பாக அனைவரும் கண்டித்ததும், எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தியதும் ஏன் என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### மௌனம் சாதிப்பது ஏன்?

இந்தச் சம்பவம் தொடர்பாக அதிர்ச்சி அடையும் மக்கள், எல். ரி. ரி. ஈ. யினர் மேற்கொள்ளும் தாக்குதல்களினால் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்தும், அவர்களால் இரகசியமாகவோ அல்லது பகிரங்கமாகவோ மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் குறித்தும் மௌனம் சாதிப்பது, மனிதப் படுகொலைகள் எல். ரி. ரி. ஈ யினரின் தொழிலென எண்ணியா?

சலுசலா நிலையத்தில் மேற்கொண்ட தாக்குதலில் இரகுநாதன் சுந்தராம்பாள் மரணமானது குறித்து துக்கத்தை வெளிப்படுத்த மக்களில் எவரும் முன்வராதது ஏன்?

யாழ். குடாநாட்டினுள் வாழும் மக்களின் மனித உரிமைகளைக் காப்பதற்கான நிறுவனத்தின் கிளையொன்று, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் யாழ். குடாநாட்டினுள் நிகழும் அத்தகைய சம்பவங்கள் தொடர்பாகப் பாரபட்சமின்றி ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆகையால் மக்கள் தமக்குள்ள பிரச்சினைகளை மனித உரிமைகளைக் காக்கும் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் தெரிவித்துத் தீர்வு காணமுடியும் — என்று கூறப்பட்டுள்ளது.

## அச்சகம்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சகம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. (இ)

# கல்வித் திணைக்களமே சீருடை தாமதமாக காரணம்

## இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதற்கு யாழ். கல்வித் திணைக்களமே காரணம் ஆகும்.

இராணுவ வட்டாரங்கள் விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். தமிழ் மக்களின் செல்வம் கல்வி என்பதனை நன்கு அறிந்து கொண்ட காரணத்தினாலேயே யாழ். குடா நாட்டில் சிவில் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கமும் பாதுகாப்புப் பிரிவினரும் கல்வி நடவடிக்கைகளுக்கு முதலிடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

ஆதலால் பாதுகாப்புப் பணிகளைச் சற்றே தள்ளி வைத்துவிட்டு பாடசாலைகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகளுக்காகத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க இராணுவ வீரர்கள் ஒருபோதும் பின் நிற்கவில்லை.

அதே போல் பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் என்பனவற்றை வரவழைத்து அவற்றைப் பகிர்ந்தளிப்பதற்காக பாதுகாப்பு படையினர் அரசாங்கத்துக்கு வழங்கிய ஒத்துழைப்பை ஆசிரியர்களும் மாணவர்களும் நன்கறிவார்கள்.

இந்தப் புத்தகங்களை வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட இராணுவ உயரதிகாரிகளில் ஒருவரான ஜெனரல் ஹமாங்கொட விடுதலைப் புலிகளின் மனிதக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார்.

ஆனாலும் இந்த நடவடிக்கைகள் தாமதமடைவதற்கு பாதுகாப்புப் படையினதோ—அல்லது அரசாங்கத்தினதோ கவனயீனம் காரணம் அல்ல என்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் அறிந்திருக்க மாட்டார்கள்.

படையினரின் ஒத்துழைப்புடன் சீருடைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்த போதிலும் யாழ். கல்வித் திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகள் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி இதனை ஒத்திவைத்து வந்துள்ளனர்.

ஆகவே மாணவர்களுக்கான சீருடைகள் தாமதமாகக் கிடைப்பதற்கு பொறுப்பானவர்கள் அரசாங்கம் அல்ல, யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளே என்பது சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக நம்புகிறோம்.

இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### நாளை

கார்த்திகை 6
வியாழக்கிழமை
திதி: ஏகாதசி
பிற்பகல் 1.23 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
நண்பகல் 12 25 வரை.
ஏகாதசி விரதம்
ராகுகாலம்: 1.40- 3 10
சுபநேரம்: 7.40 – 9.10
(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நேரம்)

# 6 பேரின் உருக்குலைந்த ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளம் காணப்பட்டன.

எழுதுமட்டுவாள் கரம்பகந்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான தாமு மாணிக்கம் (வயது 42), கிளாலியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தியாகராஜா (வயது 40), எழுதுமட்டுவாள் விழுவளையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ரயில்வே ஊழியர் பொன்னு அழகரத்தினம் (வயது 28), ஒட்டுவெளியைச் சேர்ந்த மாணவன் கந்தசாமி புலேந்திரராசா (வயது16), பளை சோரன்பற்றைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பெரிய தம்பி தவராசா (வயது 40) ஆகியோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

ஆறாவது சடலம் அடையாளம் காணப்படவில்லை. அது உடுப்பிட்டியைச் சேர்ந்த தேங்காய் வியாபாரி ஒருவருடையது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடையாளம் காணப்பட்ட ஐவரில் நால்வர் சம்பவதினம் சந்தைக்குப் பொருள்கள் கொண்டு சென்ற சமயமும் ஐந்தாவது நபரான மாணவன் ரியூசனுக்குச் சென்ற சமயமும் காணாமற் போயிருந்தனர்.

எழுதுமட்டுவாள் ஒட்டுவெளிப் பகுதியில் படையினரின் காவலரண் ஒன்றின் மீது கடந்த மாதம் 4 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து மறுநாள் காலை இவர்கள் காணாமற் போயிருந்தனர்.

ஆறு சடலங்களும் பலாலி இராணுவ தளத்துக்கு ஞாயிறன்றே கொண்டு செல்லப்பட்டன.

விசேட விமானம் மூலம் அங்கு வரவழைக்கப்பட்டிருந்த கண்டி சட்ட வைத்திய அதிகாரியும், பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளருமான டாக்டர் குறெஸ்வத்த இச்சடலங்கள் மீது பிரேத பரிசோதனை நடத்தினார்.

சடலங்களில் சில உறுப்புக்கள் மேலதிக சோதனைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டன.

வடமாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், சாவகச்சேரி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோர் முன்னிலையில் பலாலிப் படைத் தளத்தில் வைத்து மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை நிகழ்த்தினார்.

இராணுவ தளத்திற்கு அழைத்து வரப்பட்ட உறவினர்களால் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

உயர் அதிகாரிகள் முன்னிலையில் உறவினர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது.

சந்தேக நபர்களான 2ஆவது லெப்ரினன்ட் ஜயவீர, சிப்பாய்களான ரணசிங்க, சமந்த, குமார ஆகிய நால்வரையும் கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கை கிடைக்கும் வரை தீர்ப்பு வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை முருகேசு
(Retired A. O.)

சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி வடக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை முருகேசு (16-11-96) சனிக்கிழமை இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை (கட்டைக்கிளாக்கர்) - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், உமாதேவியின் அன்புக் கணவரும், விசாலாட்சி, Dr. சிவபாலன் (Centre for Water Research - University of Western Australia), Dr. சிவசங்கரம் (Economist - Canadian State), வினாயகமூர்த்தி (M.Sc Engineering, U. S. A ), கலைவாணி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர்கல்லூரி), கலையரசி, கலாதேவி (ஆசிரியை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உ. த. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (T. A. நீர்ப்பாசனத் திணைக்களம், பெரியமடு), பானுமதி, யசோதா, கைலாசநாதன் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), பாஸ்கரன் (United Merchants Ltd) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஆசிரியர்), காலஞ்சென்ற சின்னப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும், கதிர்காமத்தம்பி (ஓய்வுபெற்ற R. M P ), காலஞ்சென்ற கணேசபிள்ளை, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், நந்தகோபால், நிரஞ்சனா, நந்தரூபன், மயூரன், கவின் இராசதுரை, பிரணவன், பானுகோபிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 17-11-96 இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி உ. முருகேசு

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.
(சி/3528)

## வீரசிங்கம் மங்கையர்க்கரசி

17/11/96இல் காலஞ்சென்ற வீரசிங்கம்மங்கையர்க்கரசி அவர்களின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (20/ 11/ 96) புதன்கிழமை 12 மணிக்குச் செம்பாட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
பத்மினி
(மகள்)

545, பருத்தித்துறைவீதி,
நல்லூர்.
(43739)

திருமதி
## செல்லையா முத்துப்பிள்ளை

மருதங்குளம், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற செல்லையாவின் மனைவி முத்துப்பிள்ளை 19-11-96 இல் காலமானார்.

இவர் அம்பலவாணர், இராசம்மா, கதிரேசு, பூரணம், சங்கரப்பிள்ளை, நவீனம்மா, சரவணமுத்து, கமலாதேவி, பூபதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, செல்லத்துரை, அன்னம்மா, சின்னத்துரை, இராசம்மா, சுப்பிரமணியம், சித்திரம், புலேந்திரம், நடேசமூர்த்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (20-11-96) புதன்கிழமை பி-ப 1-00 மணிக்கு குச்சப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
அம்பலவாணர்
(மகன்)

மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு
(43732)

## சிற்றம்பலம் அமரேசன்
B. A, Dip in, Ed.
[பகுதித் தலைவர், யா/ செங்குந்த இந்துக் கல்லூரி]

வேலணையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சி. அமரேசன் ஆசிரியர் 17-11-96 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற மு. சி. சிற்றம்பலம் (முருகா)- இலட்சுமிப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - அன்னபபாவின் மருமகனும், பரமேஸ்வரியின் [ராணி] பாசமிகு கணவரும், சிறீஸ்கந்தா [மாணவன், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி H. N. D. A. II], ஸ்ரீஸ்ராம், ஸ்ரீ சிவகாமி (மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும். சரவணபவன் [V J.S. Group], திருமதி ந விருத்தாசலம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நடராசா, ச விஜயலட்சுமி, பரமசிவம் [காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வவுனியா], சிறீதரன் [மகாவலி சபை, கொழும்பு] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று [20-11-96] புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.
[43737]

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 20

கரம்பனில் உள்ள மேலைக் கரம்பன் உபாத்திபுலம் அருள்மிகு முருகமூர்த்தி கோவிலில் சூரன் போர் கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடந்தது.

## சாயி பாபா பிறந்த நாள் விழா

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 71 ஆவது பிறந்த தின விழா எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் திருநெல்வேலியில் உள்ள ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட "சத்திய ஆண்டை" ஞாபகமூட்டும் வகையில் காயத்திரி மந்திர உச்சாடனம் இருநாள்களிலும் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறும்.

யாழ். நகரைச் சேர்ந்த பல பாடசாலைகள் காயத்திரி மந்திர உச்சாடன நிகழ்வில் பங்குபற்றுகின்றன.

முதல்நாள் நிகழ்ச்சிகளின் போது பேராசிரியர் ஸி. சிவஞானசுந்தரம் (நந்தி) விசேட சொற்பொழிவாற்றுவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின்போது திரு. சிவமகாலிங்கம் விசேட சொற்பொழிவாற்றுவார்.

இருநாள்களிலும் காலை முதல் நண்பகல் 1 மணி வரை தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெறும். பண்ணிசை, சிறுவர் கலை நிகழ்ச்சி என்பனவும் நிகழ்ச்சிகளில் அடங்கும். (அ)

## கஸினோவை முஸ்லிம் காங். எதிர்க்கும்

கஸினோவை [சூதாட்டத்தை] சட்டரீதியாகசெயல்படுவதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டால், அதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்காது என்று அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அஷ்ரப் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தடைசெய்யப்பட்ட கஸினோவை வருமானம் பெறுவதற்காக மீண்டும் சட்டரீதியாக அனுமதிப்பது என அரசு முடிவு செய்திருப்பது தெரிந்ததே. (உ-3)

கடல்--
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அழைத்துவந்து சென். ஜோன்ஸ் கல்லூரியில் வைக்க ஏற்பாடாகியிருந்தது.

இக்கப்பல்கள் இன்று திருகோணமலைக்கு ஒருதொகுதி பயணிகளுடன் செல்ல ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

வவுனியா..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளும் நெருக்கடி நிலைமையை வெளிக்கொணரும் முகமாகவும்—

தமிழ்மக்கள் நலன் குறித்து மனித உரிமை நிறுவனங்களினதும், தென்னிலங்கை அரசியல்சக்திகளினதும், சர்வதேச சமூகத்தினதும் அக்கறையை தூண்டும்முகமாகவும்— இப் போராட்டம் நடத்தப்படுவதாக புளொட் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-150-3)

மனித--
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தில் இயக்குவது தொடர்பாக படையினரின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்றும்—

மற்றும் பல விடயங்கள் [illegible] ரைகளை ஜனாதிபதி வழங்க வேண்டும் என்றும் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. (இ-3)



# இந்தியா - தென் ஆபிரிக்க அணிகள் இன்று மோதும்

மூன்று ரெஸ்ட் போட்டிகளைக் கொண்ட இந்திய, தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையேயான போட்டித் தொடரில் முதலாவது ரெஸ்ட் போட்டியில் இன்று இவ்விரு அணிகளும் அஹமதாபாத்தில் மோதவுள்ளன.

இந்திய அணிக்கு சஞ்சய் மஞ்சரேக்கரும் நயன் மொங்கியாவும் துடுப்பாட்டத்தை ஆரம்பிப்பர்.

ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கே சாதகமாக அமையும் என்பதால் முதலில் துடுப்பெடுத்தாடும் அணிக்கு அதிக வெற்றி வாய்ப்புக்கள் கிட்டும்.

இந்த ஆடுகளத்தில் 1993 இல் மேற்கிந்திய தீவுகள் அணியையும் 1994 இல் ஸ்ரீலங்கா அணியையும் இந்திய சுழல் பந்துவீச்சாளர்கள் 3 நாள்களிலே சுருட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது (இ-10)

### மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவர்
# செய்முறைப் பயிற்சிகள் மீண்டும் இங்கு ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான வைத்திய செய்முறைப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகளை வழங்க போதிய வைத்திய நிபுணர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் இல்லாத காரணத்தால், இவர்களுக்கான பயிற்சியை களுத்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டதும்— அங்கு பாதுகாப்பு பிரச்சினைகள் தோன்றியதும் — பின்னர் அது நிறுத்தப்பட்டதும் — தெரிந்தவையே.

தற்சமயம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இவர்களுக்கு செய்முறைப் பயிற்சி அளிக்கப்பட்ட போதும், அறுவைச் சிகிச்சை தொடர்பான பயிற்சிகளை இவர்கள் பெறுவது சிக்கலாகவே உள்ளது என்றும் —

அறுவைச் சிகிச்சை நிபுணர் இல்லாததே அதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது. (இ-9-ரி)

# யாழ். இந்து அதிபர் பதவி விண்ணப்பம் கோரப்படும்

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்படும் வரை தற்போது அக்கடமையை ஆற்றி வரும் ரி. அருளானந்தம் பதில் அதிபராகப் பணி புரிவார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நேற்று இத்தகவல்களைத் திருமலையில் தெரிவித்தார்.

பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி, இதற்கு முன்னர் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் பதவிக்கு நியமனக் கடிதம் பெற்ற த. கனகசிங்கம் யாழ்ப்பாணம் — நல்லூர் கல்விக் கோட்ட அலுவலகத்தில் கையொப்பமிடுமாறு பணிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-150)

# மரண அறிவித்தல்

திருமதி
## அன்னப்பிள்ளை சோமசுந்தரம்

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை சோமசுந்தரம் 14- 11- 96 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பொன்னம்மா இரத்தினம் (ஆசிரியை, சி. சி. பாடசாலை, நீர்வேலி) திருமதி கண்மலர் புவனேந்திரன் (ஆசிரியை, அத்தியார் இந்துக்கல்லூரி) காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி இரத்தினம் சின்னத்தம்பியின் (கந்தரோடை) அன்புச் சகோதரியும், இரத்தினம், புவனேந்திரன் (ஆசிரியர், கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி கைதடி), திருமதி வே. மணிமேகலை (இடைக்காடு) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி மகேந்திரன் (ஞானப்பிரகாச வித்தியாலயம் - சிறுப்பிட்டி), திருமதி அ. சந்திரசேகரம் (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை, நீர்வேலி), சிவானந்தராசா (ஜேர்மனி), கிருபானந்தன் (சுவிஸ்), நித்திலா (சுவிஸ்), பவானந்தன் (யாழ்.பல்கலைக்கழகம்), கசிகலா, மலர்மகள் (இணைந்த பல்கலைக்கழகம் - வவுனியா), சுதா (சுவிஸ்), காண்டீபன் (லண்டன்), ஐங்கரன், கோபி, வேணு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14 - 11 - 96 இல் வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி கண்மலர் புவனேந்திரன்
(மகள்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(43728)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org